# உலகத்துக்கே வழிகாட்டும் உன்னத ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## தேனியில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**தேனி, மே 11–**

**உலகத்துக்கே வழிகாட்டுகிறது உன்னத திராவிட மாடல் ஆட்சி என்று தேனியில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

**திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்து நான்கு ஆண்டுகள் நிறைவுபெற்றதை தொடர்ந்து, நான்காண்டு ஆட்சியின் சாதனைகளை விளக்கும் வகையில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் உள்ள கட்ட பொம்மன் சிலை அருகில், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு என்ற தலைப்பில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் சிறப்புரையாற்றினார்!**

அவர் ஆற்றிய உரை வருமாறு….

“என்னோடு நாடாளுமன்றத்திலே பணியாற்றக் கூடிய தேனியின் மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் அவர்கள், சாதாரண, சாமானிய மக்களுக்காக தமிழ்நாட்டு மக்களுக்காக அவர்களின் குறைகளை அவர்களுடைய கோரிக்கைகளை அவர்கள் வாழ்க்கையில் சந்திக்க கூடிய போராட்டங்களை மிக எளிய நடையிலே கேட்கக் கூடியவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலே அதே நேரத்திலே ஒரு நகைச் சுவை உணர்வோடு நாடாளுமன்றத்திலே எடுத்து வைக்கக் க்கூடிய திறமை பெற்றிருக்கக் கூடிய ஒருவர் தான் நம்முடைய மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் அவர்கள்.

ஒருமுறை ரயில்வே பற்றி நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய அந்த நேரத்திலே, நீண்ட காலமாக ரயில் திட்டம் வரவில்லை என்ற சலிப்பை கோபத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால்… ஒரு ரயில் கேட்கிறார். அதைக் கேட்டுவிட்டு நான் சின்ன வயசிலிருந்து இந்த ட்ரெயினை கேட்டுக்கிட்டு இருக்கேன் என்று சொன்ன போது அவையே இந்த நகைச்சுவையை கேட்டு சிரித்தது. அந்த அமைச்ச ருக்கு நிச்சயமாக இந்த உணர்வு எட்டி இருக்கும். அந்த ரயில் வரும் என உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரோடு நாங்களும் காத்திருக்கிறோம்.

கழகம் அறிவிக்கக்கூடிய எந்த போராட்டமாக இருந்தாலும், முன்னால் வந்து நின்று நாடாளுமன்றத்திலே போராடக்கூடிய ஒருவர்தான் இங்கே இருக்கக்கூடிய மாவட்ட கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் அவர்கள்.

அவர் இன்றைக்கு நடத்தக்கூடிய இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

### ஆட்சிக்கு வரும் முன்னரே மக்களை காத்தவர் தளபதி

இங்கே நம்முடைய அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சி, திராவிட முன்னேற்ற கழக ஆட்சியின் சாதனைகளைப் பற்றி எடுத்து மக்களுக்கு விளக்கக்கூடிய ஒரு கூட்டமாக இந்த கூட்டம் அமைந்திருக்கிறது. நேற்றுதான் நாடு போற்றக்கூடிய உலகம் போற்றக்கூடிய எல்லோரும் திரும்பி பார்க்கக் கூடிய ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடிய, நம்முடைய திராவிட முன்னேற்ற கழக ஆட்சி நான்கு ஆண்டுகளை வெற்றிகரமாக முடித்து ஐந்தாவது ஆண்டிலே காலடி எடுத்து வைக்கக்கூடிய நிகழ்வை நாம் நடத்தி முடித்திருக்கிறோம்.

இங்கே பேசிய மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் பேசும்போது சொன்னதைப்போல. 2021 இல் ஆட்சி நமது கைக்கு வந்து விட்டது, வெற்றி நமது கைக்கு வந்துவிட்டது, ஆனால் ஆட்சிப் பொறுப்பை இன்னமும் முதலமைச்சர் ஏற்றுக்கொள்ள வில்லை… அந்த நேரத்திலே முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னாலேயே நம்முடைய முதலமைச்சரவர்கள் அதிகாரிகளை எல்லாம் அழைத்து தமிழ் மண்ணை தமிழ் மக்களை வாட்டி வதைத்து கொண்டிருக்க கூடிய அந்த கொரோனா தொற்றில் இருந்து மக்களை எப்படி பாதுகாக்கலாம் என்று கூட்டங்களை நடத்திய முதலமைச்சர்தான் அண்ணன் தளபதி அவர்கள்.

இது நாம் கண்கூடாக பார்த்த உண்மை. வெற்றி என்று அறிவிப்பு வந்து விட்டது. ஆனால் பதவி ஏற்றுக்கொள்வதற்கு இன்னும் சில தினங்கள் இருக்கின்றன. அவரை சந்திக்க சென்றபோது, அதிகாரிகளை எல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு தமிழ் மக்களை எப்படி காப்பாற்றுவது என்று கூட்டம் போட்டு ஆலோசனை நடத்தி மக்களை பாதுகாத்த தலைவர் தான் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள்.

ஆனால் அதே காலகட்டத்திலே பாஜக ஆட்சியிலே இருக்கக்கூடிய உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களை நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்கள் என்றால், அங்கே இருக்கக்கூடிய மக்களை காப்பாற்ற முடியாமல் ஓடக் கூடிய ஆறுகளிலே நீர் நிலைகளிலே புனித கங்கை என்று சொல்லக்கூடிய அந்த நதியிலே கூட மக்களின் சடலங்களை வீசி எறிந்து மிதந்து கொண்டு வந்த அவலங்கள் எல்லாம் நாம் பார்த்தோம்.

அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலே மக்களை சேர்த்துக் கொள்ளக்கூட வழி இல்லாமல் வகை இல்லாமல் மருத்துவர்கள் இல்லாமல்… மருத்துவமனை வாசலில் கோவிட்டால் பாதிக்கப்பட்ட மக்கள், காத்துக் கிடந்த அந்தக் கொடுமைகளையும் நாம் பார்த்தோம். நல்லவேளை இங்கே திராவிட மாடல் ஆட்சி நடந்ததால், நாம் காப்பாற்றப்பட்டோம் என்ற நினைக்கக்கூடிய அந்த பாதுகாப்பை உணரக்கூடிய அந்த தருணத்திலே ஆட்சி பொறுப்பிற்கு வந்த முதலமைச்சர் தான் நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள்.

### சாதனைகள் மட்டுமல்ல போராட்டங்களும்!

இந்த நான்காண்டுகள் என்பது சாதனைகள் மட்டுமல்ல. எத்தனையோ போராட்டங்கள்.

ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பிஜேபி இன்று நேற்று அல்ல நம்மோடு அவர்களுக்கு காலம் காலமாக பகை. ஏனென்றால் இது ஒரு வர்க்கப் போராட்டம். இனப் போராட்டம் மொழிப் போராட்டம். ஆதிக்கப் போராட்டம்.

தொடர்ந்து அவர்களுடைய கருத்துக்களை சித்தாந்தங்களை தமிழ்நாட்டின் மீது தமிழ் மக்கள் மீது திராவிட இன மக்கள் மீது திணித்துக்கொண்டே இருக்கக்கூடிய கொள்கையை கையில் எடுத்திருக்கக் கூடியவர்கள் தான் பிஜேபி யை சேர்ந்தவர்கள்.

இன்று திடீரென வந்து நாடு நாட்டுப்பற்று எல்லாம் பேசுவார்கள். ஆனால் அவர்கள் கொண்டாடக்கூடிய தலைவர்கள் நாட்டுக்காக சிறைக்கு செல்லவில்லை. இந்த நாடு விடுதலை அடைவதற்காக போராடவில்லை.

சிறைக்குச் சென்ற ஒருவர் இரண்டு பேர் கூட மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்தவர்கள் தான் பாஜக ஆர் எஸ் எஸ் சிலே இருப்பவர்கள். ஆனால் திராவிட இயக்கம் இந்த நாட்டு மக்களின் விடுதலையை தாண்டி இந்த மக்கள் விடுதலை பெற்றால் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்ற சமூகப் போராட்டத்தையும் கையில் எடுத்த இயக்கம் திராவிட இயக்கம்.

ஒரு காலகட்டத்திலே நம் வீட்டுப் பிள்ளைகள் படிக்க முடியாது. சமஸ்கிருதம் படித்திருந்தால் தான் மருத்துவக் கல்லூரிக்கு போய் டாக்டராக முடியும். நம் வீட்டுப் பிள்ளைகள் சமஸ்கிருதம் படிப்பதில்லை. இப்போது சமஸ்கிருதம் படி என்று கொண்டு வந்து திணிக்கிறார்கள். அதைப் படித்து யாருக்கு என்ன பயன் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் ஒரு காலகட்டம் இருந்தது ஒரே ஒரு ஜாதியை சேர்ந்தவர்கள் தான் அரசு பதவியில் இருப்பார்கள். நீதிபதிகளாக இருப்பார்கள் கலெக்டராக இருப்பார்கள் அது யார் என்று உங்களுக்கு தெரியும் வேறு யாருக்கும் வாய்ப்பு கிடையாது வசதி கிடையாது படிக்கக்கூடிய வழி கிடையாது நாம் சமமாக நடத்தப்பட்டது இல்லை அதையெல்லாம் உடைத்து தமிழ்நாட்டில் இன்று எந்த வீட்டு பிள்ளையும் பள்ளிக்கூடத்துக்கு போகாமல் இல்லை என்ற நிலையை உருவாக்கிக் காட்டி இருக்கிறோம் என்றால் அதுதான் திராவிட இயக்க ஆட்சி.

இந்த மண்ணில் உள்ள மக்களின் உரிமை களுக்காக போராட தொடங்கப்பட்ட இயக்கம்தான் திராவிட இயக்கம். இப்படிப்பட்ட இந்த இயக்கத்தின் தலைவர்களாக கள நாயகர்களாக மண்ணிலே தோன்றிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் வரை இந்த மக்களுக்கான போராட்டத்தை தொடர்ந்து கையில் எடுத்து போராட கூடியவர்கள்.

### நமக்காக மட்டுமல்ல… மற்ற மாநிலங்களுக்காகவும்!

இந்த ஆட்சியின் சாதனைகளைப் பற்றி நாம் பேசிக் கொண்டே போகலாம். விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை. ஒரு கோடியே 14 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமை தொகையாக வழங்கப்படுகிறது. மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி இதெல்லாம் மக்களுக்காக நம்முடைய முதலமைச்சர் வகுத்து தரக்கூடிய திட்டங்கள்.

ஆனால் இந்தத் திட்டங்களை எல்லாம் மாநிலத்துக்கு வகுத்து தருவதற்கு அடிப்படையாக ஒன்று இருக்கிறது. அது நம்முடைய மாநில உரிமைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் நம்முடைய மாநில உரிமைகளை மட்டுமல்ல… நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை மாநிலங்கள், பாஜக ஆட்சி செய்யாத அத்தனை மாநிலங்களின் உரிமைகளையும் பாது காக்கக்கூடிய குரல் கொடுக்கக்கூடிய ஒரே முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் மட்டும்தான். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று நாம் பெருமையோடு சொல்லக்கூடிய முதலமைச்சர் அவர்கள் தான்.

### தொகுதி மறு சீரமைப்பு முன்னெச்சரிக்கைக் குரல்!

தொகுதி மறுசீரமைப்பு டி லிமிடேஷன் பிரச்சினை குறித்து, உலகத்தில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. இன்னும் வராத ஒரு பிரச்சினைக்காக இப்போது இவ்வளவு கவலைப்படுகிறார் என்று சிலர் சந்தேகப்படலாம். எதற்காக நாட்டிலே இருக்கக்கூடிய பல முதலமைச்சர்களை எல்லாம் அழைத்து தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் ஒரு கூட்டத்தை நடத்தினார். அதைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### 100 நாள் பணம் வந்தது நம்முடைய போராட்டத்தால்…

இன்று தமிழ்நாட்டில் எத்தனை எம்.பி.க்கள்,? 39 எம்.பி.க்கள் பாண்டிச்சேரி சேர்த்து 40 எம்.பி.க்கள் இருக்கிறோம்.

39 எம்.பி.க்கள் டெல்லியில் நாடாளுமன்றத்தில் இருக்கிறோம். ஏதாவது ஒரு கருத்தை சொல்ல வேண்டுமென்றால் அத்தனை பேரும் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்து நின்று அந்த கருத்தை ஆணித்தர மாக அழுத்தமாக நாடாளுமன்றத்தில் சொல்கிறோம். நாம் சொல்லக்கூடிய கருத்தை அவர்கள் கேட்கவில்லை என்றால் நாடாளுமன்றத்திலே அமளியில் ஈடுபடுகிறோம். பதில் கிடைக்கும் வரை போராடுகிறோம். இல்லையென்றால் அந்த நாடாளுமன்ற மைய மண்டபத்துக்கு சென்று நாங்கள் அங்கே போராட்டத்தில் ஈடுபடுகிறோம். எங்களை மீறி நாடாளுமன்றத்தை நடத்த முடியாமல் ஸ்தம்பிக்க வைக்கிறோம்.

ஐந்து மாதமாக 100 நாள் வேலைக்கு பணம் வரவில்லை. நிதியமைச்சரோடு நானும் சென்று இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களிடம் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கட்டளைக் கிணங்க சென்று பலமுறை கடிதம் கொடுத்திருக்கி றோம். செய்து தருகிறேன் என்று சொன்னார்களே தவிர செய்யவில்லை.

ஒருநாள் உங்களுடைய எம்.பி. அவர்களும் இருந்தார்கள். நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி சரியான பதில் கிடைக்காத நிலையில்… நாடாளுமன்ற மையத்தில் திரண்டு அவையை நடக்க முடியாமல் ஒத்தி வைக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கிய பிறகு தான்… அமைச்சர் இறங்கி வந்து எங்களோடு பேசினார். ஒரு மாதத்துக்குள் பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்.

நம்முடைய முதலமைச்சரின் எழுதிய கடிதத்திற்கு பதில் கிடைத்தது. இப்போது கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் பணம் நம்முடைய தமிழகத்துக்கு தரப்பட்டிருக்கிறது. இது 39 பேர் இருந்து போராடியதால் கிடைத்த நியாயம். புரிந்து கொள்ள வேண்டும்.

### நல்லா படித்தால் ஃபெயிலா?

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி எத்தனை மக்கள் தொகை இருக்கு என்ற கணக்கை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் எத்தனை தொகுதிகள் என தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் திராவிட இயக்க ஆட்சியில் கல்வி சுகாதாரம் ஆகியவற்றிலே கவனம் செலுத்தினோம். இரண்டு குழந்தைகள் இருந்தால் தான் பெண்களை குழந்தைகளை படிக்க வைக்க முடியும் என்பதால், குறைவாக குழந்தைகளை பெற்றுக் கொள்கிறோம். பிள்ளைகளைப் படிக்க வைத்து நல்ல வேலைக்கு அனுப்புகிறோம். உலகம் முழுவதிலும் இருக்கும் பல்வேறு நாடுகளில் இங்கிருக்கும் நம்முடைய இளைஞர்களும் இளைஞர்களும் சென்று பணியாற்றுகிறார்கள்.

இந்த நிலையை உருவாக்கி, நாம் இந்த தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் அழைத்து சென்றிருக்கிறோம். அதனால் நம்முடைய மக்கள் தொகை குறைந்திருக்கிறது. வளரும் நாடுகளுக்கு இணையாக தமிழ்நாட்டின் மக்கள் தொகை குறைந்து வருகிறது.

ஆனால் இது பற்றி எந்த கவலையும் இல்லாமல்



மக்களை எந்த கவலையும் இல்லாமல் மக்களைப் பற்றி ஆரோக்கியத்தை பற்றி பிள்ளைகள் படிக்கிறார்களா இல்லையா என்று எந்த கவலையும் இல்லாமல் ஜனத்தொகையை குறைக்க வேண்டும் என்று அக்கறை இல்லாத மாநிலங்களுக்கு… இந்த மக்கள் தொகை அடிப்படையில் எடுக்கப்படக்கூடிய கணக்கெடுப்பிலே அதிகமாக எம்.பி.க்கள் அவர்களுக்கு கிடைக்கும்.

இன்றுதான் தேர்வு முடிவுகள் வந்திருக்கின்றன. 95 விழுக்காட்டுக்கு மேலே நம்முடைய மாணவர்கள் மிகச் சிறப்பாக வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆனால் நன்றாக படித்து அதிக மார்க் வாங்குகிற பிள்ளைகளை பெயில் செய்தால் அது சரியா? தவறு.

அதேபோல மக்கள் மீது அக்கறை கொண்டு மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாட்டுக்கு எம்.பி.க்கள் குறைக்கப்படும். ஆனால் மக்களைப் பற்றி எந்த கவலையும் இல்லாமல், இருந்த அரசாங்கங்களால் அவர்களின் மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது. அவர்களுக்கு எம்பிக்களை அதிகப்படுத்திக் கொடுப் பார்களாம். நமக்கு குறையுமாம் அவர்களுக்கு ஏறுமாம். இது எப்படி நியாயமாகும்?

### இப்போதும் போராடித்தான் வெல்ல வேண்டியிருக்கிறது

39 எம்.பி.க்கள் இருக்கும்போதே சண்டை போட்டு தான் நியாயத்தை வாங்க வேண்டி இருக்கிறது. அந்த 39 என்பது, 30 ஆக, 28 ஆக குறைந்தால் நாம் பேசுவதை யாரும் கேட்பார்களா? கேட்கவே மாட்டார்கள். இந்த உரிமையை பாதுகாக்கத்தான் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் இந்தியா முழுவதிலும் ஒரு விழிப்புணர்வை உருவாக்கி இருக்கிறார்கள்.

ஏனென்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு வரவேண்டிய திட்டங்கள், எம்பிக்களை எண்ணிக்கை அதிகரித்தால் திட்டங்களும் அதிகரிக்கும். எம்பிகள் உடைய எண்ணிக்கை குறைந்தால் தமிழ்நாட்டைப் பற்றி நாங்கள் கவலையே படவேண்டாம் என்று அவர்கள் ஆட்சி நடத்துவார்கள். அந்த நிலை தமிழ்நாட்டுக்கு வந்துவிடக்கூடாது தமிழ் மக்களின் உரிமை எந்த காலகட்டத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கக் கூடிய முதல மைச்சர்தான் அண்ணன் தளபதி அவர்கள். இப்படி மக்களின் உரிமைகளுக்காக மொழியை பாதுகாப்ப தற்காக தொடர்ந்து போராடுகிறார் நமது முதல்வர்.

### நம் பிள்ளைகளை பின்னோக்கி இழுக்கிறது பா.ஜ.க…

சில பேர் கேட்கிறார்கள் ஹிந்தி படித்தால் என்ன? இன்று பள்ளிக்கு போகக்கூடிய பிள்ளைகளுக்கு அறிவியல் படிக்க வேண்டி இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சர் ஆணையிட்டு நடந்த அந்த ஆராய்ச்சியின் விளைவாக தமிழ்நாட்டில் தான் இரும்புக்காலம் தொடங்கியது இங்கிருந்து தான் உலக சரித்திரம் எழுதப்பட வேண்டும் என்பதை நிரூபித்திருக்கிறோம். இதையெல்லாம் பிள்ளைகள் படிக்க வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்கள் தான் பள்ளிக்கூடங்களில் தொழில்நுட்பக் கல்வி தகவல் தொழில்நுட்பம் அதைத் தாண்டி கம்ப்யூட்டர் கல்வி இதையெல்லாம் படிக்க வேண்டும் என்ற திட்டங்களை கொண்டு வந்தார். அதனால்தான் நம்முடைய பிள்ளைகள் இன்று உலகம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்தில் மிகப் பெரிய இடங்களில் இருக்கக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் இன்று அதையும் தாண்டி ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் என்பதை நோக்கி நாம் போய்க்கொண்டிருக்கிற நிலையிலே, இப்போது மீண்டும் போய் இந்தி படி என நம்முடைய பிள்ளைகளின் படிப்பை கெடுக்கும் திட்டங்களைத் தான் அவர்கள் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் அறிவியல் படி என்கிறோம். இந்த உலகத்தை புரிந்து கொள்வதற்கு எது தேவையோ அதை படி என்று தமிழ்நாடு அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சோசியல் மீடியாவில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஒரு இளைஞர் ஃபோனை எடுத்து அவருக்கு கன்னட மொழி தெரியவில்லை. போனை எடுத்து ஆட்டோ ஓட்டக் கூடியவரிடம் பேசுவதற்காக… போனில் நான் சொல்வதை அவரிடம் கன்னட மொழியில் மரியாதையோடு பணிவாகப் பேசு என்று சொல்கிறார். அந்த செயலியும் ஆட்டோக்காரரிடம் பேரம் பேசி இருவரும் ஒப்புக்கொண்டு செல்கிறார்கள்.

இது அறிவியல். இதை தெரிந்து கொள் என்று தான் முதலமைச்சர் சொல்கிறார். திராவிட இயக்கம் சொல்கிறது.

நீ இந்தி கற்றுக்கொள் சமஸ்கிருதம் கற்றுக்கொள் என்கிறார்கள். சமஸ்கிருதம் கற்றுக்கொண்டு அந்த பிள்ளை யாரிடம் பேசும்? தமிழ்நாட்டில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம். உள்ளே போக முடியும் மாநிலங்களில் உள்ளே போய் சமஸ்கிருதத்தில் யாரிடம் பேசுவார்கள்? உள்ளே விட மாட்டீர்கள். கற்றுக்கொண்டு என்ன செய்வது?

நம் பிள்ளைகளை பின்னுக்கு இழுக்கக்கூடிய திட்டங்களோடு வருகிறவர்களை எந்த காலகட்டத்திலும் அவர்களை உள்ளே விட்டு விடாதீர்கள்.

நம் பிள்ளைகளோட எதிர்காலத்திற்காக நம்முடைய பிள்ளையின் வளர்ச்சிக்காக நாம் தலைநிமிர்ந்து சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்பதற்காக வேலை வாய்ப்புகளை பெற வேண்டும் என்பதற்காக இந்த உலக அரங்கிலே தலை நிமிர்ந்து வாழக் கூடியவர்களாக தமிழ் இனத்தை மாற்றுவதற்காக தொடர்ந்து போராடக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்

### தளபதியின் நல்லாட்சிக்கு மூன்று சாட்சிகள்

நேற்று அண்ணன் தளபதி அவர்கள் இருந்த மேடையிலே நடந்த மூன்றே மூன்று விஷயத்தை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு குழந்தை பேசியது. ஐந்தாவது வகுப்பு படிக்கக் கூடிய குழந்தை. அந்த குழந்தையின் பெற்றோர் கூலி வேலைக்கு போகிறார்கள் காலையில் உணவு சமைத்து வைத்துவிட்டு போகக்கூடிய வாய்ப்பு வசதி எங்களுக்கு கிடையாது. நேரமில்லை. அதனால் அந்த குழந்தை பசியோடு பள்ளிக்கு வரும் மதிய உணவு வரை காத்திருக்கும். ஆனால் நம்முடைய முதலமைச்சருடைய காலை உணவு திட்டம் வந்த பிறகு எந்த பிள்ளையும் பசியோடு மதியம் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த தாயும் பிள்ளையை சாப்பாடு போடாமல் அனுப்பி விட்டேனே என்று மதியம் வரும் வரை பதறிக் கொண்டிருக்க கூடிய அவசியம் இல்லை. தாயைப் போல நம்முடைய முதல்வர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையோடு நம் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பலாம்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 17 லட்சம் பிள்ளைகளுக்கு மேல் அரசு பள்ளிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகள் காலை உணவு திட்டத்தில் காலை பள்ளிக்கு சென்றவுடன் வயிறார சாப்பிட்டுவிட்டு படிக்கக்கூடிய ஆட்சி தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது.

### உலகம் போற்றும் உன்னத ஆட்சி

நான் முதலில் பேச தொடங்கிய போது நாடு போற்றக் கூடிய ஆட்சி மட்டுமல்ல உலகம் போற்றக்கூடிய ஆட்சி என்று குறிப்பிட்டேன். நாடு போற்றும் ஆட்சி என்று சொல்லுங்கள் நியாயம். உலகம் போற்றும் ஆட்சி என்று சொல்வது உங்களுக்கே கொஞ்சம் ஓவராக இல்லையா என சில பேர் கேட்கலாம்.

உண்மையிலேயே உண்மையிலேயே உலகம் போற்றக்கூடிய ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சி. ஏனென்றால் நமக்கு பிறகு தான் கனடா நாட்டில் நம் முடைய காலை உணவு திட்டம் கொண்டு வந்த பிறகு தான் அங்கே இந்த திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

உலகத்தில் இன்னொரு நாடு நம் மாநிலத்தை பார்த்து ஒரு திட்டத்தை பின்பற்றுகிறது என்ற பெருமையை பெறக்கூடிய ஆட்சி நம்முடைய ஆட்சி.

காலை உணவு திட்டம் வந்த பிறகு… பள்ளிக்கு வராமல் விடுபட்டிருந்த ஒரு சில குழந்தைகள் கூட பள்ளிக்கு வரக்கூடிய வாய்ப்பு உருவாகி இருக்கிறது. 98 சதவீத பிள்ளைகள் சரியான நேரத்துக்கு காலையில் பள்ளிக்கு வருகிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்பு சொல்கிறது. இதற்கு காரணம் காலை உணவு திட்டம்.

### இன்னுயிர் காக்கும் நம் முதலமைச்சர்

இன்னொன்று…. ஒரு இளைஞன் பேசுகிறார். அவர் பெயர் ஹரிஷ்… அவரும் அவரது துணைவியாரும் பைக்கில் செல்கிறார்கள். விபத்து நடந்து விடுகிறது. அந்த விபத்தில் அந்த இளைஞனுக்கு தலையில் மிக மோசமான காயங்களோடு ஆம்புலன்ஸ் மூலம், தலைவர் கலைஞர் கொண்டு வந்த ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார். இன்னுயிர் காப்போம் 48 என்ற திட்டத்தின் அடிப்படையில்…

மருத்துவம் தெரிந்த அனைவருக்கும் தெரியும் முதல் 48 மணி நேரத்துக்குள் சரியான சிகிச்சை கிடைத்தால் அவர்களை காப்பாற்றி விட முடியும்.

ஒரு காலகட்டத்தில் விபத்து நடந்தால் எங்கே தூக்கிக் கொண்டு செல்வது என்று கூட தெரியாது. பக்கத்திலே தனியார் மருத்துவமனை இருக்கும். அவர்கள் போடும் பில்லில் அந்த குடும்பம் மீண்டும் தலைநிமிரவே முடியாது. அவ்வளவு பெரிய கடன் சுமையாக அது மாறிவிடும்.

ஆனால் இன்று யாருக்கும் அந்த குழப்பம் வராது. எந்த மருத்துவமனையாக இருந்தாலும் தைரியமாக கூட்டிச் செல்லலாம் ஏனென்றால் விபத்து நடந்த உடன் 48 மணி நேரத்துக்குள் ஆகும் செலவை ஏற்றுக் கொள்வது தமிழ்நாடு அரசு.

இதைத்தான் ஹரிஷ் சொல்கிறார்… “ எனக்குத் தலையில் அடிபட்டு நியூரோ சர்ஜரி செய்தார்கள். அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் குடும்பத்தில் யாரிடமிருந்தும் ஒரு பைசா வாங்கவில்லை. இந்த மேடையில் நான் இருந்து பேசுகிறேன் என்றால் அதற்கு காரணம் தமிழ்நாடு முதலமைச்சர்தான்’ என்று அவர் சொல்கிறார்.

### தேனியிலும் தோழி

இன்னொரு இளம் பெண்… கோவை அருகிலே ஒரு ஊரில் இருந்து வரக்கூடிய இளம் பெண். உழைக்கும் மகளிருக்கான தோழி என்ற அரசு விடுதி இருப்பதால் சென்னையில் தங்கி படித்து பாதுகாப்பான சூழலில் நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். உயர் கல்விக்கு போகிறேன் என்று அந்த இளம் பெண் சொல்கிறார். இங்கே தேனியிலும் விரைவில் முதலமைச்சர் ஒரு தோழி விடுதி கட்டி தருவதாக வாக்களித்திருக்கிறார் விரைவில் அந்த பணிகள் தொடங்கப்படும். அதனால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கக்கூடிய ஆட்சி நம்முடைய முதலமைச்சரின் ஆட்சி.

48 மணி நேரத்துக்குள் உயிர் காக்கும் சிகிச்சை வழியாக கிட்டத்தட்ட 3 லட்சம் பேருக்கு மேல் தமிழ்நாட்டில் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். வீடு தேடி மருத்துவம் மக்களை தேடி மருத்துவம் என்ற மிக மகத்தான திட்டம். ஏனென்றால் வெளிநாடுகளில் கூட யாரும் வீடு தேடி மறுத்தவர்கள் வர மாட்டார்கள். அப்பாயின்மென்ட் வாங்கிக் கொண்டு மருத்துவர்களுக்காக மருத்துவமனையில் சென்று காத்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டில் வீடு தேடி பிசியோதெரபி அல்லது வேறு ஏதேனும் சிகிச்சையா… கிட்டத்தட்ட இரண்டு கோடி பேருக்கு மேல் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெற்று இருக்கிற ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. அண்ணன் தளபதி அவர்களின் ஆட்சி.

### உரிமையை உணர்த்தும் கலைஞர் உரிமைத் தொகை

அதேபோல் விடியல் பயணம். இங்கே இருக்கக்கூடிய சகோதரிகளுக்கு நன்கு தெரியும். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு சில மணி நேரங்களிலே முதலமைச்சர் ஒரு கோப்பிலே கையெழுத்து இடுகிறார். அந்த கோப்பு மகளிர் விடியல் பயணத்திற்கான கோப்பு. நகர் புறப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணம் கிடையாது என்று சொல்லக்கூடிய அந்தத் திட்டம்.

மகளிர் உரிமைத்தொகை. உதவித்தொகை அல்ல உரிமைத்தொகை. காலையிலிருந்து இரவு வரை ஒவ்வொரு சகோதரியும் உழைக்கக் கூடிய உழைப்புக்கு யாராவது இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்கிறார்களா? காலையில் எல்லோருக்கும் முன்பு எழுந்து உழைத்து எல்லோரையும் கவனித்து எல்லோரும் தூங்கப்போன பிறகு அதன் பிறகு வீட்டில் இருக்கும் மிச்ச வேலைகளை முடித்துவிட்டு நீங்கள் போய் படுக்கிறீர்கள்

ஞாயிற்றுக்கிழமை லீவு கிடையாது. நல்ல நாள் பெரிய நாள் எதுவும் வந்தால் வேலை இன்னும் அதிகமாகத்தான் ஆகும். யாராவது வந்து இவ்வளவு கஷ்டப்படுகிறாயே உன்னை பாராட்டுகிறேன் என்று சொன்னதில்லை. முதல் முறையாக தம் தமிழகத்திலே இருக்கக்கூடிய சகோதரிகளின் உழைப்பை அங்கீகரிக்க கூடிய வகையில் உங்களுக்கான உரிமைத் தொகையை வழங்குகிறேன் என்று வழங்கிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி.

ஆனால் அதை வழங்கும்போது முதலமைச்சர் சொன்னார். இதை உங்களுடைய உழைப்புக்கான ஊதியம் என்று கருதி விடாதீர்கள். ஏனென்றால் உங்களுடைய உழைப்புக்கு ஊதியம் என்று கொடுக்க முடியாது. அது கணக்கு போட்டால் எங்கேயோ போய் நிற்கும். அதற்கு ஒரு பாராட்டாக தலை வணங்கக் கூடிய வகையிலே அந்த ஆயிரம் ரூபாயை நான் தருகிறேன் என்று, இன்று ஒரு கோடியே 14 லட்சம் பேருக்கு அந்த உரிமைத் தொகை கிடைக்கிறது.

மிச்சம் இருக்கக்கூடிய விண்ணப்பம் செய்திருக்க கூடிய சகோதரிகளுக்கு விரைவிலே உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற நல்ல செய்தியையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விடியல் பயணம் சொல்லும் செய்தி

அந்த ஆயிரம் ரூபாய் உங்களுடைய பணம். அதை என்ன செலவு செய்ய வேண்டும் என்று நீங்கள் யாரிடமும் கேட்க வேண்டியதில்லை. நீங்கள் நினைத்ததை உங்களால் பார்க்க முடியும். நீங்கள் நினைத்ததை அந்த ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு செய்ய முடியும். இந்த ஆயிரம் ரூபாய் மூலம் பெண்கள் பொருளாதார உரிமை என்றால் என்னவென்று உணர்ந்தார்கள்.

அதுதான் அந்த உரிமைத் தொகை. இனிமேல் ஆயிரம் ரூபாய் பெற்ற எந்த சகோதரியும் தன்னுடைய பெண்ணை வேலைக்கு அனுப்ப மாட்டேன் என்று சொல்ல மாட்டார். தளபதி எனக்கு ஆயிரம் ரூபாய் அளித்திருக்கிறார். என்னுடைய மகள் வேலைக்கு போகட்டும். அவள் மாதம் பத்தாயிரம் ரூபாயில் முதல் லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கட்டும், தன் சொந்தக் காலிலே நிற்க வேண்டும் என்ற கனவை அனைத்து பெண்களின் மனதிலும் விதைத்திருக்கக்கூடிய திட்டம் தான் மகளிர் உரிமைத்தொகை.

### கனவுகளை நனவாக்கும் புதுமைப் பெண் திட்டம்!

அதேபோல பள்ளிக்கூடத்தை முடித்துவிட்டு நம்முடைய சகோதரிகள் அரசு பள்ளிகளிலே படித்த பெண்கள் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று கனவோடு வருகிற போது எதற்கு தேவையில்லாத செலவு என்று யாரும் அந்தப் பெண்களின் கல்லூரி படிப்பை நிறுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான்… நான் இருக்கிறேன் மாதம் ஆயிரம் ரூபாய் உனக்குத் தருகிறேன்… உனக்கு என்ன வேண்டுமோ வாங்கிக்கொள் உனக்கு என்ன கற்றுக் கொள்ள வேண்டுமோ கற்றுக் கொள் என்று மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப் பெண் திட்டம் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

அந்த திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்திய போது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் என்னுடைய தொகுதியான தூத்துக்குடியில் தான் விழா நடத்தினார்.

அப்போது அந்த மேடையிலே ஒரு சகோதரி சொன்னார்… என் குடும்பத்தில் வறுமை. படிக்க முடியவில்லை கல்யாணம் செய்து விட்டார்கள். நான் நர்சிங் படித்து முடித்துவிட்டு நர்சாக வேலை பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு. எனக்கு குழந்தைகள் பிறந்து விட்டன. இனிமேல் படிக்க முடியும் என்ற நம்பிக்கையே இல்லாமல் இருந்தது. முதலமைச்சர் மாதம் ஆயிரம் ரூபாய் கல்லூரி படிப்புக்கு வழங்குகிறேன் என்று அறிவித்த பிறகு அதை பயன் படுத்திக் கொண்டு நான் நர்சிங் படிப்பில் சேர்ந்தேன். இப்போது படிப்பை முடிக்கப் போகிறேன். இன்னும் சில மாதங்களில் நான் வேலைக்கு போகப் போகிறேன் என்று அந்த நன்றியை முதலமைச்சருக்கு மேடையிலே தெரிவித்தார். எத்தனையோ சகோதரிகளின் கனவுகளை நடவாக்கி கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நம்முடைய திராவிட மாடலா ஆட்சி. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

### இதுதான் தமிழ்நாடு…

மக்களுக்கான திட்டங்களை மக்கள் கேட்பதற்கு முன்பே கோரிக்கை வைப்பதற்கு முன்பே திட்டங்களை நிறைவேற்றி தந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி. ஏனென்றால் அதை ஒவ்வொரு நாளும் உணரக்கூடியவர்கள் நீங்கள். ஆட்சிக்கு வந்த போது முதலமைச்சர் சொன்னார். ‘எனக்கு வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காத வர்களுக்கும் சேர்த்து நடக்கக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கும்’ என்று கூறினார்.

(பேசிக் கொண்டிருக்கும்போது அருகில் இருக்கக் கூடிய மசூதியில் பாங்கு ஒலிக்கிறது. அதனால் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சை சற்று நிறுத்தினார். அதை உணர்ந்து கூட்டத்தினர் கைதட்டினார்கள்)

கைதட்ட வேண்டாம். ஏனென்றால் இது தமிழ்நாடு. அனைவரது உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் மதிக்கும் மண். உத்திரபிரதேசமாக இருந்தால் ரம்ஜான் அன்றைக்கு மசூதிகளை மூடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

ஆனால் தமிழ்நாட்டிலே எல்லோருக்கும் மரியாதை இருக்கிறது எல்லோரும் தமிழர்களாய் சகோதரர்களாய் சகோதரிகளால் வாழும் மண் இந்த மண்.

அதனால்தான் திரும்பத் திரும்ப சொல்கிறோம் இதே ஒற்றுமை, மத நல்லிணக்கம் தமிழ்நாட்டிலே எந்த காலத்திலும் மாறிவிடக்கூடாது. அதை மாற்றக் கூடிய அவர்களுக்கு இங்கே சிறிதளவு கூட இடம் கொடுத்து விடாதீர்கள் என்று போராடிக் கொண்டிருக்கிறோம்.

தேனியை தேனி மாவட்டமாக அறிவித்து இங்கே மருத்துவக் கல்லூரி பொறியியல் கல்லூரி சட்டக் கல்லூரி உள்ளிட்ட அத்தனை அடிப்படை வசதிகளை யும் உருவாக்கி தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி. அந்த ஆட்சியின் நீட்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய நம்முடைய முதலமைச்சர்கள் கரங்களை வலுப்படுத்து வோம். மீண்டும் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியை முதல் நல்லிணக்கத்தை காப்பாற்றக்கூடிய ஆட்சியை தமிழ் மொழியை காப்பாற்றக்கூடிய ஆற்றிலே நம்முடைய உரிமைகளை பாதுகாக்க கூடிய ஆட்சியை நம்முடைய பிள்ளைகளுடைய எதிர்காலத்தை பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடிய ஆட்சிகள் மறுபடியும் மறு படியும் உருவாக்கி காட்டுவோம் இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இதில் மாவட்ட கழகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ் செல்வன், சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார், மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நகரச் செயலாளர் புருசோத்த மன், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மூக்கையா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்!